# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## முன்னோடிப் பரீட்சை க.பொ.த உயர்தரம் 2017
## இஸ்லாம் - I

பகுதி I நேரம் : இரண்டு மணி

**01 – 20 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் 05 கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று வினாவிற்குப் பொருத்தாமனது. அப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01 இலாஹ் என்ற பதத்தின் கருத்தைத் தராத சொல்.
1 வணக்கத்திற்குரியவன் 2 பராமரிப்பவன் 3உதவி செய்பவன்
4 சட்டமியற்றும் அதிகாரம் உடையவன் 5 அன்புக்குரியவன்

02 இலங்கையில் இஸ்லாம் பற்றிக் குறிப்பிடும் “புதூஹுல் புல்தான்” என்ற நூலின் ஆசிரியர் யார்?
1 இப்னுபதூதா 2 மஸ்ஊதி 3 இப்னுஷஹ்ரயார்
4 ஓராபி பாஷா 5 அல் - பலாஸுரி

03 நீர் ஏன் ஜஹ்காலத் தொழுகையில் அதிக கரிசனை காட்டுகின்றீர் என்று முஸ்லிம் அல்லாத நண்பரொருவர் உம்மிடம் வினாவினால் நீர் அவருக்கு சொல்லும் சரியான பதில்.
1 முஸ்லிமாக இருந்தால் கட்டாயம் தொழல் வேண்டும்.
2 தொழுகையினால் உடல் ஆரோக்கியம் கிடைக்கும்
3 அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்படல் வேண்டும்.
4 சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கான வழி
5 தொழுகை தலைவைத்துவப் பண்புகளை வளர்க்கும்

04 ஷரீஆவின் மூலாதாரங்களுள் மூன்றாவது
1 அல்குர்ஆன் 2 அல்ஹதீஸ் 3 அல்இஜ்திஹாத்
4 அல்இஜ்மாஉ 5 அல் கியாஸ்

05 ஏகோபித்த முடிவு என்பதனைச் சுட்டிக்காட்டும் அறபுப்பதம்
1 அல்இத்திபாஉ 2 அல்இஜ்திஹாத் 3 அல் இஜ்மாஉ
4 அல்கியாஸ் 5 அத்தக்லீத்

06 மதுபானத்தை நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு வர்ணித்துள்ளார்கள்
1 பெரும்பாவம் 2 புத்தியைப் போக்கக் கூடியது 3 வீண்விரயம்
4 உடல் ஆரோக்கியத்தைக் கெடுப்பது 5 தீமையின் தாய்

07 நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னரும் நபிமார்கள் வரலாம் என்னும் நம்பிக்கை
1 குப்ரை ஏற்படுத்தும் 2 ஒரு பெரும்பாவமாகும் 3 ஷிர்க்கானதாகும்
4 போலியானதாகும் 5 கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்டதாகும்.

08 ஸகாத் பெறத் தகுதியுடையோர்களில் தற்காலத்தில் வீடற்றோர் அடங்கும் பிரிவு
1 பீஸபீலில்லாஹ் 2 இப்னுஸ் ஜபீல் 3 அடிமைகள்
4 காரிமூன் 5 அல்முஅல்லாபத்குலூப்

09 பிக்ஹ் துறை அறிஞர்களின் தொகுதி
1 இமாம் அஹ்மத், இமாம்ஜுஹ்ரி, இமாம் மாலிக், இமாம் ராபிஈ
2 இமாம் ஷாபிஈ, இமாம் நஸஈ, இமாம் நவவி, இமாம் அஹ்மத்
3 இமாம் அபூஹனீபா, இமாம்மாலிக், இமாம் அபூயூஸுப், இமாம் ஹஸின் அல்
4 இமாம் ஷாபிஈ, இமாம் நவவி, இமாம்மாலிக், இமாம் அஹ்மத்இப்னு ஹன்பல்
5 இமாம் மாலிக், இமாம் ரமனீ, இமாம் அபூதாவூத், இமாம் ராபிஈ

10.இரு வேறுபட்ட பிரச்சினைகளை அனுமானித்து அவற்றுக்கானதீர்வுகளை முன்வைப்பதற்கு துணையாகஅமையும் மிகப் பிரதானஅம்சம்.
1 அஸ்ல் 2 பர்உ 3 இல்லத் 4 ஹுஜ்ம் 5 உர்பு

11. தக்வாவைஏற்படுத்தும் அமலாகஅல்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடும் பிரதான இபாதத் யாது?
1 நோன்புநோற்றல் 2 தர்மம் செய்தல் 3பாவங்களை விடுத்தல்
4 பள்ளவாசல்களைஅமைத்தல் 5 தொழுகைநிறைவேற்றல்

12. தனதுமனைவியைமீளப்பெறக் கூடியதலாக் எவ்வாறுஅழைக்கப்படுகின்றது?
1 தலாக்பாஇன் 2 தலாக் ஸுன்னீ 3 தலாக் ரஜா
4 தலாக் பித்ஈ 5 பஸ்க்

13. அதிகமான ஹதிஸ்களைஅறிவித்த ஸஹாபிபெண்மணி
1 ஆயிஷா (ரல) 2 உம்மதர்தா 3 ஸெய்னப் பின் ஜஹ ஷ்
4 ஹப்ஸா (ரலி) 5 உம்முஹராம் பின் மில்ஹான்

14 ‘‘அல்குப்உ’’என்றஅறபுச் சொல்லின் கருத்து
1 கணவன் மனைவிதெரிவு 2 பெண் பார்த்தல் 3 மணமகன் விருப்பம்
3 திருமணப் பேச்சுவார்த்தை 4. பொருத்தப்பாட்டைஅவதானித்தல்

15 ‘‘அல் மன்ஸிலதுபைனல் மன்ஜிதைன்’’குப்ருக்கும் ஈமானுக்குமிடையிலானஒருநிலைபற்றிபேசுபவர்கள்
1 காரியாக்கள் 2 மு.ஃ.தஸிலாக்கள் 3. குவாரிஜ்கள்
4 ஜஹ்மிய்யாக்கள் 5 ஷுஆக்கள்

16 அஸ்லின் பொதுத்தன்மையைவிடபர்உவின் பொதுத்தன்மையானதுஅதிகமாக இருப்பின் அது
1 கியாஸுல் அவ்லா 2 கியாஸுல் அத்நா 3கியாஸுல் முஸாவி
4 கியாஸுல் முரக்கப் 5 கியாஸுல் கபீ

17 ஒருதாபிஈநபி(ஸல்) அவர்கள் கூறியதாகஅறிவிக்கும் ஹதீஸ்
1 மர்பூ.ஃ. 2 முஅல்லக் 3 முன்கதி.ஃ. 4 மு.ஃ.ழல் 5 முர்ஸல்

18 401 ஆடுகளைவைத்திருக்கும் ஒருவர் வருடமுடிவின் போதுகொடுக்கவேண்டியநிஸாபின் அளவு
1 5 ஆடுகள் 2 4 ஆடுகள் 3. 3ஆடுகள்
4 2 வயதுகாளைமாடு 5 2 வயதுகாளைமாடு 2

19 ஸபபுன் நுஸுல் என்பது
1 அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு 2 அல்குர்ஆன் அருளப்பட்டகாரணம்
3 அல்குர்ஆன் அருளப்பட்டஒழுங்கு 4 அல்குர்ஆன் அருளப்பட்டபடித்தரம்
5 அல்குர்ஆன் அருளப்பட்டமுறை

20 ‘‘ஹலீபதுள்ளாஹ்’’என்றழைக்கப்படும் நபி
1 ஆதம் (அலை) 2 நூஹ் (அலை) 3 இப்ராஹீம் (அலை)
4 மூஸா (அலை) 5 முஹம்மத் (ஸல்)

**21 – 30 வரையுள்ளவினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களைகொண்டுள்ளது. அவற்றுள் நான்குதலைப்புக்குப் பொருத்தமானதாகும். பொருத்தமான கூற்றுக்களின் சேர்மானங்களைதொகுதியைத் தெரிவுசெய்க.**

21. ஆஹாதான ஹதீஸ்களில் இஸ்னாதின் அடிப்படையில் தோன்றும் பிரிவுகள்

A- முர்ஸல் B- மு.ஃழல் C- மஷ்ஹூர்

D- முன்கதி.ஃ. E-முஅல்லக்

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE

(5) BCDE

22. மறுமைநாளின் நிகழ்வுகளைவைத்துஅதற்குப் பலபெயர்கள் உண்டுஅவற்றுள் சில

A-யவ்முத்தீன் B-யவ்முல் ஹகியாமா v- யவ்முல் புர்க்கான்

D-யவ்முல்ப.ஃ.ஸ் E-யவ்முல் ஹிஸாப்

1 ABCD 2 ABCE 3 ABDE 4 ACDE 5 BCDE

23 சூறாபாத்திஹாவுக்குரியபெயர்களைக் கொண்டமைந்ததொகுதி

A-சூறதுல் முனாஜாத் Bகிதாபுல் உம்மு C ஸப்உல் மஸானி

D -சூறதுஸ் ஸலாத் E-கன்சுல் குர்ஆன்

1. ABCD 2 BCDE 3 ACBE 4 BDEA 5 BCDE

24 இஸ்லாமியதிருமணத்தில் வாழ்க்கைத் துணைவரைஅல்லதுவாழ்க்கைத் துணைவியைதேர்ந்தெடுக்கும் போதுகவனத்தில் கொள்ளப்படவேண்டியவிடயங்கள்

A- குப்அல்லதுகபாஅத் B-நாள்,நட்சத்திரம்,பிறைஎண் பார்த்தல்

C -ஆஜ்னபி Dமார்க்கபக்தி E –சிறந்தகல்வி

1 ABCD 2 BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE

25அல்குர்ஆன் பால் ஒரு முஸ்லிமுக்குள்ளகடமைகள்

A- ஆல்குர்ஆனைஓதுதல் வேண்டும்

B- ஆதனைவிளங்குதல் வேண்டும்

C- அதன் வழி நடத்தல் வேண்டும்

D- அதனைவீட்டுச்வுரில் தொங்கவிடல்

E- அதன் பால் அழைத்தல் வேண்டும்

1 ABCD 2 ABDE 3 ACDE 4ACBE ABCE

26 நோன்பினால் ஏற்படும் நன்மைகள்

A- உடலாரோக்கியம் குன்றுதல்

B- ஏழைகளின் பசியைஉணருதல்

C- புலனடக்கம்

D- பொறுமை

E- தக்வா

1 ABCD 2 ABDE 3 ACDE 4 BCDE 5 ABCE

27இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள்

A–மதீனாவில் வாழ்ந்தவர் Bஆலிமுல் குறைஷ் எனஅழைக்கப்பட்டவர்

C–முவத்தாவின் ஆசிரியர் D-புகழ் பெற்றசட்டஅறிஞர்

E–மதீனாவாசிகளின் நடைமுறையைசட்ட மூலாதாரமாகக் கொண்டவர்

5 ABCD 2 ABCE 3 ABDE 4 BCDE 5.BCDE

28நிகாஹ் நிறைவேறதேவையானஅடிப்படைஅம்சங்கள்

A- ஈஜாப் கபூல் B- வலி Cவலீமா D ஷாஹித் E-மஹர்

1. ABDE 2 ABCD 3 ABCE 4 ACDE 5 BCDE

29 தடைசெய்யப்பட்டஉணவுபாண வகைகள் சில

A- நுஜீஸானவை Bபிறசமயங்கள் Cபோதைதரக்கூடியது

D - ஷரீஆமுறையில் அறுக்கப்படாதவை E- ஹரமானஉழைப்பின் மூலம் பெறப்பட்டவை.

1. ABCD 2 ABDE 3 ACDE 4 BCDE 5 ABCE

30 தொழுகையின் லௌளகீகநன்மைகள்

A- மனநிறைவையும் நிம்மதியையும் தருகின்றது

B- கப்ரின் வேதனையைகுறைக்கின்றது

C- மானக்ஜகடானவிடயங்களிலிருந்துதடுக்கின்றது

D- சமத்துவப் பண்பைஏற்படுத்துகின்றது

E- தலைமைத்துவத்துக்குகட்டுப்படும் தன்மையைவளர்க்கின்றது.

1 BCDE 2 ABCE 3 ABDE 4 ABCD 5 ACDE

**31 – 35 வரையுள்ளஒவ்வொருவினாவிலும் X,Y என்னும் நிரல்களின் கீழ் சிலதகவல்கள் Yநிரலில் தரப்பட்டுள்ளவைXநிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்புபட்டவைஆனால் அவைசரியானஒழுங்கில் தரப்படவில்லை. X நிரலில் உள்ளவற்றைYநிரலில் உள்ளவற்றுடன் சரியாகஒழுங்குபடுத்தும் போதுஐந்துசேர்மானங்களுள் ஒன்றுசரியாகஅமையும் சரியானசேர்மானத்தைதெரிவுசெய்க.**

**31.**

| X | Y |
|---|---|
| 1 கவாரிஜ் | A–அபூமன்சூர் |
| 2 மாதுருதீய்யா | B–மிர்ஸா அலிமுஹம்மத் |
| 3 மு.ஃ.தஸிலா | C– ஜ.ஃ.த் பின் திர்ஹம் |
| 4 புஹாயிஸம் | D–அப்துல்லாஹ் பின் வஹ்ப் |
| 5 ஜபரிய்யா | D–வாஸில் பின் அதா |

1. DEBAC 2. CEABD 3. DACBC 4. CEBAD 5.CBEDA

32.

| X | Y |
|---|---|
| 1 முஸ்னத் | A - இமாம் புஹாரி (ரஹ்) |
| 2 ஜனத் | B - இமாம் அஹ்மத் |
| 3 முதவாதிர் | C –அறிவிப்பாளர் வரிசை |
| 4 ஜாமியுஸ் ஜஹீஹ் | D – அஸ்மாஉர் ரிஜால் |
| 5இஸ்னாத் | E – அதிகமான அறிவிப்பாளர் கொண்டவை |

1.ECDEA 2 BECAD 3. BDEAC 4. BDECA 5. BCDEA

33.

| X | Y |
|---|---|
| 1 எழுப்பப்படும் நாள் | A- ஜஹன்னம் |
| 2 விசாரணை | B- ஹிஸாப் |
| 3 நரகம் | C- நஈம் |
| 4 சுவர்க்கம் | C- நீர்த்தடாகம் |
| 5 ஹவ்ழ் | E- ப.ஃ.ஸ் |

1. EBADC 2. EADBC 3.EBDAC 4. EBACD 5. ECBDA

34.

| X | Y |
|---|---|
| 1 விபச்சாரம் | A- கரம் துண்டிக்கப்படல் |
| 2 கொலை | B- 40 கசையடிகள் |
| 3 திருட்டு | C- 80 கசையடிகள் |
| 4 அபாண்டம் சுமத்துதல் | D- 100 கசையடிகள் |
| 5 மது அருந்துதல் | E- பழிக்குப்பழி |

1 DAECB 2. DEACB 3.EADBC 4. EDACB 5 ADCBE

35.

| X | Y |
|---|---|
| 1 உண்மை | A- இஸ்மத் |
| 2 நம்பகத்தன்மை | B- ஸித்க் |
| 3 விவேகம் | C- அல் அமானத் |
| 4 பிரச்சாரம் | D- அல் பதானத் |
| 5 பாவஙட்களிலிருந்து பாதுகாக்கப்படல் | E- அத்தப்லீக் |

1 ABDCE 2. BDCAE 3.BDCEA 4. BCDEA 5 ACDEB

36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்குக் கிழேயுள்ள (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் பல் தேர்வு விடைப்பத்திரத்திலுள்ள ஐந்து கூடுகளுள் பொருத்தமானதற்கு அடையாளமிடுக.

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | பிழையானது | சரியானது |
| 3 | சரியானது | பிழையானது |
| 4 | பிழையானது | பிழையானது |
| 5 | 1ம் கூற்று சரியானது | இரண்டாம் கூற்று சரியானது மேலும் முதலாம் கூற்றை விளக்குகின்றது. |

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 36 | யூதர்களின் வாரத்திருநாள் வெள்ளிக்கிழமை ஆகும். | மறுமைக்கான அடையாளங்கள் அனைத்தும் மறுமை நிகழ்வதற்கு முன்னர் நடந்தே தீரும். |
| 37 | முக்பூலான ஹதீஸ் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீஸ்களைக் குறிக்கும் | மக்பூலான ஹதீஸ்கள் ஸஹீஹ் ஹஸன் என 2 வகைகளாகப் பிரிகின்றன. |
| 38 | குடும்ப வாழ்க்கைக்கு எதிரான வாழ்க்கை முறையே துறவறமாகும். | எல்லா நபிமார்களுக்கும் வழங்கப்பட்ட தீன் ஒன்றாகவே காணப்பட்டது. |
| 39 | அரேபிய வர்த்தகர்கள் நாடு | காதிஸிய்யா எனும் யுத்தம் உரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்றது. |
| 40 | இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மதீனாவில் பிறந்தார்கள் | முவத்தா எனும் நூலை எழுதியவர் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஆவார். |

41 – 50 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

41. இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் முழுப்பெயர்
   1. முஹம்மத் இப்னு இஸ்மாயீல்
   2. முஹம்மத் இப்னு யஸீத்
   3. முஹம்மத் பின் இப்ராஹீம்
   4. ஸுலைமான் இப்னு அஷ்அஷ்
   5. முஹம்மத் இப்னு ஈஸா

42. ஒரு இமாமைப் பின்பற்றும் இவர் தனது இமாம் தீர்வு சொல்லாத புதிய பிரச்சினைகள் வரும் போது தனது இமாமின் வழி நின்று அப் பிரச்சினைக்கு தீர்வு சொல்லும் முஜ்தஹித்
   1. முஜ்தஹிதுல் பத்வா
   2. முஜ்தஹிதுல் முன்தஸிப்
   3. முஜ்தஹிதுல் பில்மத்ஹப்
   4. முஜ்தஹிதுல் தஹ்ரீஜ்
   5. முஜ்தஹிதுல் தர்ஜீஹ்

43. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்துக்கான பகிரங்க அழைப்பை எந்த மலைக் குன்றிலிருந்து ஆரம்பித்தார்கள்?
   1. ஸபா மலை
   2. முர்வா மலை
   3. ஹிரா மலை
   4. தூர்ஸினா
   5. ஓஹது மலை

44. நபி(ஸல்) அவர்களால் கட்டப்பட்ட முதல் மஸ்ஜித்
   1. மஸ்ஜிதுந் நபவி
   2. முஸ்ஜிதுல் கூபா
   3. முஸ்ஜிதுல் குபா
   4. க.்.பதுல்லாஹ்
   5. பைதுல் முகத்தஸ்

45. பலதார மணத்தை இஸ்லாம் அனுமதிப்பதற்குக் காரணமான யுத்தம் எது?
   1. பத்ர்
   2. உஹத்
   3. குந்தக்
   4. தபூக்
   5. கைபர்

46. சுற்றாடல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் இஸ்லாமிய கோட்பாடு
   1. இபாதத்
   2. கிலாபத்
   3. இஹ்ஸான்
   4. முஸாரஆ
   5. இமாரத்

47. நபித் தோழரின் கூற்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   1. மவ்கூப்
   2. முர்பூ
   3. முக்தூ
   4. முர்ஸல்
   5. அஸர்

48. அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்கள்
   1 பிறை 11,12,13
   2. பிறை 13,14,15
   3.முாதத்தில் பிறை 13,14,14
   4. துல்ஹஜ் பிறை 13,14, 15
   5. துல்ஹஜ் பிறை 11,12,13

49. சுவர்க்கவாதிகளுக்கு முதல் விருந்தாக வழங்கப்படுவது
   1. மது
   2. மீனின் ஈரல்
   3. ஆட்டிறைச்சி
   4. பேரீச்சம்பழம்
   5. அப்பிள் பழம்

50. இன்றைய உலகம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றது. இஸ்லாமிய நோக்கில் இந் நிலைக்கான பிரதான காரணம்.
   1. இலஞ்சம்
   2. வட்டி
   3. மோசடி
   4. பேராசை
   5. முதலாளித்துவம்

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## முன்னோடிப் பரீட்சை க.பொ.த உயர்தரம் 2017

## இஸ்லாம் - II

**பகுதி I** **நேரம் : மூன்று மணி**

**இப் பத்திரம் 2 பகுதிகளைக் கொண்டது பகுதி (அ) இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**இப்பத்திரத்திற்குரிய புள்ளிகள் 100 ஆகும்.**

### பகுதி "அ"

**01)**

(அ) நோன்பின் மூலம் உருவாகும் குணப்பண்புகள் யாவை என விளக்குக? (05 புள்ளிகள்)

(ஆ) ஒரு முஸ்லிமின் ஆளுமை விருத்தியில் அப்பண்புகளின் பங்கை ஆராய்க? (05 புள்ளிகள்)

(இ) நோன்பு காலத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் பழக்கவழக்கங்களை விளக்குக? (05 புள்ளிகள்)

(ஈ) ரமழான் காலத்தில் சமூகத்தில் நிலவும் பிழையான செயற்பாடுகளை ஆராய்க? (05 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

**02)** பின்வரும் இரண்டு அம்சங்களையும் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை ஆராய்க?

(அ) உலக வாழ்வு (10 புள்ளிகள்)

(ஆ) மரணத்துக்குப் பின்னால் உள்ள வாழ்வு (10 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

**03)** போலி ஹதீஸ்கள் தொடர்பாகப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்கம் தருக?

(அ) போலி ஹதீஸ்கள் தோன்றுவதற்கான காரணங்கள் (10 புள்ளிகள்)

(ஆ) அவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அவற்றின் விளைவுகளும். (10 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

### பகுதி "ஆ"

**01** குடும்ப வாழ்வு தொடர்பாக பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) திருமணத்தின் பிரதான நோக்கங்கள் 05 புள்ளிகள்

(ஆ) அர்கானுந் நிகாஹ் 05 புள்ளிகள்

(இ) கணவன் மனைவி உறவு பற்றிய இஸ்லாமிய போதனைகள் 05 புள்ளிகள்

(ஈ) சமூகத்தில் பெருகி வரும் விவகாரத்தும் அதன் விளைவுகளும் 05 புள்ளிகள்

(20 புள்ளிகள்)

**02)** இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி விரிவாக விளக்குக? (20 புள்ளிகள்)

**03)** இஜ்திஹாத் பற்றிப் பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) இஜ்திஹாத் பற்றிய வரைவிலக்கணம் 03 புள்ளிகள்

(ஆ) முஜ்தஹிதுகளுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் 08 புள்ளிகள்

(இ) சட்டத்துறையில் இஜ்திஹாதின் பங்கு 09 புள்ளிகள்

(20 புள்ளிகள்)

**(04)** அல்குர்ஆன் தொகுக்கப்பட்ட வரலாற்றைப் பின்வரும் படித்தரங்களில் எடுத்தியம்புக.

(அ) நபி(ஸல்) அவர்களது காலம் 07 புள்ளிகள்

(ஆ) அபூபக்கர் (ரழி) அவர்களது கிலாபத் காலம் 07 புள்ளிகள்

(இ) உஸ்மான் (ரழி) கிலாபத் காலம் 06 புள்ளிகள்

(20 புள்ளிகள்)

**05)** பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

அ) அகீதா 05 புள்ளிகள்

ஆ) மக்கி சூறாக்கள் 05 புள்ளிகள்

இ) மதனீ சூறாக்கள் 05 புள்ளிகள்

ஈ) ஹிர்க் 05 புள்ளிகள்

(20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## முன்னோடிப் பரீட்சை க.பொ.த உயர்தரம் 2017
## இஸ்லாம் - I

**புள்ளித்திட்டம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 1 | 21 | 4 | 31 | 3 | 41 | 1 |
| 2 | 5 | 12 | 3 | 22 | 3 | 32 | 5 | 42 | 3 |
| 3 | 1 | 13 | 1 | 23 | 5 | 33 | 3 | 43 | 1 |
| 4 | 4 | 14 | 5 | 24 | 4 | 34 | 2 | 44 | 3 |
| 5 | 3 | 15 | 2 | 25 | 5 | 35 | 4 | 45 | 2 |
| 6 | 5 | 16 | 1 | 26 | 4 | 36 | 2 | 46 | 5 |
| 7 | 1 | 17 | 5 | 27 | 5 | 37 | 5 | 47 | 5 |
| 8 | 2 | 18 | 1 | 28 | 1 | 38 | 1 | 48 | 5 |
| 9 | 4 | 19 | 2 | 29 | 3 | 39 | 4 | 49 | 2 |
| 10 | 3 | 20 | 1 | 30 | 5 | 40 | 3 | 50 | 2 |

**இஸ்லாம் II**

**பகுதி "அ"**

**01) (அ)**

- அன்பும் கருணையும்
- நேர முகாமைத்துவம் கட்டுப்பாடும்
- பாவ மன்னிப்பு
- நன்றி செலுத்துதல்
- பிறர் நலன் பேணல்
- மனித நேயம்

- தக்வா
- மனக் கட்டுப்பாடு
- பொறுமை
- தாராளத்தன்மையும் ஈகையும்
- இ:.லாஸ்

(05 புள்ளிகள்)

**(ஆ)** ஒரு முஸ்லிமின் ஆளுமை விருத்தியில் அப் பண்புகளின் பங்கு அன்பும், கருணையும், தக்வா, நேரமுகாமைத்துவம் கட்டுப்பாடும், மனக்கட்டுப்பாடு, பாவமன்னிப்பு, பொறுமை, நன்றி செலுத்துதல், தாராளத்தன்மை, ஈகை, பிறர்நலன் பேணல், இ:.லாஸ், மனித நேயம், போன்ற பண்புகளை தனது தனிப்பட்ட சமூக, குடும்ப வாழ்க்கையின் போது கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் தன்னகத்தே உருவாக்கிக் கொள்ளும் செல்வாக்கும் சிறப்பும் ஆகும்.

(05 புள்ளிகள்)

**(இ)** நோன்பு காலத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் பழக்கவழக்கங்களை விளக்குதல்.

- ➢ நோன்புக்கான முன்னாயத்தங்கள் - வீடு பள்ளிவாசல்கள்
- ➢ நோன்பு தொடர்பான நிகழ்ச்சிகள் - இப்தார், பயான், மஜ்லிஸ்கள்
- ➢ நோன்பு கால நன்கொடைகள் - அனாதை அல்லம், அங்கவீன்ர்கள் இல்லம்
- ➢ ஸகாத்தினை ரமழானில் வழக்கமாக்குதல்
- ➢ தராவீஹ், கியாமுல்லைல் ஏற்பாடுகள் வீடுகளிலும் பள்ளிவாசல்களிலும்
- ➢ புனித குர்ஆன் ஹிஸ்பு மஜ்லிஸ்களாக கழித்தல்

- பிறை 27ம் இரவை விசேட நிகழ்வுகளாக கழித்தல்
- கஞ்சி விஷேடத்துவம் பெறல் இவ்வாறான விடயங்கள் உள்ளடக்கபடல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

**(ஈ)** நோன்பு காலத்தில் சமூகத்தில் நிலவும் பிழையான செயற்பாடுகளை விளக்குதல், ஆராய்தல்.

- நோன்பை ஆரம்பிப்பதிலும், முடிப்பதிலும் சமூக ரீதியாக முரண்படல்
- இரந்து வாழ்வோர் நாலா புறங்களிலும் காட்சியளித்தல்
- இப்தார் இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் விளையாடுதல்
- இப்தார் எனும் பெயரில் வீண் விரயங்களை அதிகரித்தல்
- ஸக்காத்தினை ரமழானில்தான் கொடுக்க வேண்டும் என எண்ணி செயற்படல்
- இஸ்லாமிய நடைமுறை தொடர்பான வீண் சர்ச்சைகள் ஏற்படல்

(05 புள்ளிகள்)

**(அ) உலக வாழ்வு**

- மனிதன் பல வாழ்க்கைக் கட்டங்களைக் கொண்டவன் அதில் ''ஆலமுல் பன எனப்படுவதே'' இவ்வுலக வாழ்க்கையாகும்.
- இப்பிரபஞ்சத்தையும், அதிலுள்ள அனைத்தையும் அல்லாஹ் மனித நலனுக்காகவும், அவனது மேம்பாட்டுக்காகவும் படைத்துள்ளான்.
- இவைகளை மனிதன் முறையாகவும், பயனுள்ளவையாகவும் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டதும், அருளாக வழங்கப்பட்டதுமாகும்.
- இவ்வருட் கொடைகள் பற்றியும், இவ்வுலக வாழ்க்கை பற்றியும் பொறுப்புடையவன் என்பதால் அவை பற்றி விசாரிக்கபடுவான்.
- இவ்வுலக வாழ்வு மனிதனை சோதிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது அதனடிப்படையிலேயே அவனது வெற்றியும் தோல்வியயும் தங்கியுள்ளது.
- மனிதன் இவ்வுலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்டுள்ளான் பிரதிநிதி என்ற வகையில் கிலாபத், இபாதத், இமாரத் ஆகிய கடமைகளைச் செய்வதினூடாகவே அவனது வாழ்வு அமைய வேண்டும்.
- மனிதன் இவ்வுலக வாழ்க்கையைப் புறக்கணித்து ஆன்மீக வாழ்வில் மூழ்கி விடுவதையோ ஆன்மீகத்தைப் புறக்கணித்து இவ்வுலகியல் வாழ்வில் மூழ்கி விடுவதையே இஸ்லாம் அங்கிகரிக்கவில்லை.
- இவ்வுலக வாழ்வை மறுமையின் விளை நிலமாகப் பயன்படுத்தல் இந் நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களை விளக்குதல்

( 10 புள்ளிகள்)

**(ஆ) மரணத்துக்குப் பின்னால் உள்ள வாழ்வு**

- இது ''ஆலமுல் பர்ஸஜ்'' எனப்படும் கிப்னுடைய வாழ்க்கையையும் அதனைத் தொடர்ந்துள்ள மஹ்ஷர், ஹிஸாப், மீஸான், ஸிறாத், ஜன்னத், நார் என்பவற்றையும் கொண்டதாகும்.
- இஸ்லாம் மனிதன் மரணித்ததின் பின்னர் மறுமை வாழ்வில் நுழைவதாக நம்புதலை ஈமானின் பிரதான அம்சமாக வைத்துள்ளது. இல்லையேல் ஈமான் பூரணமடையாது.
- மறுபிறப்பு கோட்பாட்டையோ, இறை சங்கம கோட்பாட்டையோ இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.
- இம்மையை பயன்படுத்துவதிலேயே மறுமை வாழ்வின் வெற்றியும் தோல்வி தங்கியுள்ளது.
- முனிதன் மறுமை வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள ஒரேயொரு சந்தர்ப்பமாக இவ்வுலக வாழ்வு அமைந்துள்ளது.
- நுன்மைகள் அதிகம் செய்வது மறுமையின் நல்வாழ்விற்கு துணையாகவும், பாவங்களிலீடுபடுதல் மறுமை வாழ்வை பாழ்படுத்த காரணமாக அமையும்.
- மறுமை வாழ்வு மனிதனுக்கு பரிசினையும், உயர்வையும் வழங்கும். அதே வேளை இழிவையும், வேதனையையும் பெறக் காரணம் என்பதால் சொர்க்கம், நரகம் நிரந்தர வாழ்வாகும்.

- இந் நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் விளக்கப்படல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

**(03) (அ)** போலி ஹதீஸ்கள் தோன்றுவதற்கான காரணங்கள்
- போலி ஹதீஸ் பற்றிய விளக்கம்
- அரசியல் காரணிகள் உதாரணம் : ஆட்சியாளர்களின் ஆதரவை பெறுவதற்காக ஹதீஸ்கள் புனைந்துரைக்கப்பட்டன.
- வியாபாரக்காரணிகள் உதாரணம் - விளம்பரம் - பொருட்களை விற்கபனை செய்தல்
- குழு கேத்திர பிரதேச உணர்வுகளை வலுப்படுத்தல்
- ஆட்சியாளர்களின் ஆதரவை பெறல்
- நன்மையின் பக்கம் தூண்டுதல்
- பிரபல்ய நோக்கம்
- பிக்ஹ் தொடர்பான கருத்து வேறுபாடு

**(ஆ)** போலி ஹதீஸிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அவற்றின் விளைவுகளும்.
- ஸஹாபாக்கள் காலம் முதல் மேற்கொள்ளபடப்ட முயற்சிகள்
  1. ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டமை
  2. நூலுருப்படுத்தப்பட்டமை
- அஸ்மா உர் ரிஜால் தொகுக்கப்பட்டமை
- ஸனத் பற்றி ஆராயும் கலை
- இல்முல் ஜர.்.வத்த.்.தீல் அறிமுகப்படுத்தப்படல்
- ஹதீஸ்கள் தராதரப்படுத்தல்
  1. ஸஹீஹ் - ழயீப்
  2. ஆஹாத் - முகாஜீர்
- உஸூலுல் ஹதீஸ் அறிமுகப்படுத்தப்படல்
- போலி ஹதீஸ்களை வேறாக தொகுத்து வழங்கியமை
- போலியான றாவிகளை அடையாளப்படுத்தியமை
- ஸஹீஹான ஹதீஸ் வேறாக தொகுக்கப்பட்டமை – அஸ்ஸிஹாஹுஸ்ஸித் இவை விரிவாக விளக்கப்படல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

## பகுதி (ஆ)

**01)**

**(அ)** திருமணத்தின் பிரதான நோக்கங்கள்
- சந்ததி விருத்தி
- அன்பு, அமைதி, நிம்மதி, பெறல்
- உடலியற் தேவைகளை முறையாக பூர்த்தி செய்டதல்
- நிர்வாக முகாமைத்துவ பயிற்சி
- ஒழுக்க சீர்கேடுகளிலிருந்து பாதுகாத்தல்
- நபி வழி

(05 புள்ளிகள்)

**(ஆ)** அர்கானுந் நிகாஹ்
- மணமகன்
- மணமகள்
- வலி
- ஷாஹித்
- ஈஜாப் - கபூல் விளக்கப்படல்

(05 புள்ளிகள்)

**(இ)** கணவன் மனைவி உறவு பற்றிய இஸ்லாமிய போதனைகள்

- கணவன் மனைவி இருவரும் ஒரு வண்டியின் இரு சக்கரங்கள் போன்றவர்கள்
- இதில் கணவன் தலைவனாவான்
- கணவன் - மனைவியினதும், குழந்தைகளினதும் பொறுப்பு ரீதியாகவும் மனைவி அதற்கு துணை புரிபவளாகவும் காணப்படல்.
- மனைவி தனது கணவனின் சொத்துக்களையும், கற்பொழுக்கத்தினையும் பேணிப்பாதுகாக்க கடமைப்பட்டவள்
- அல்லாஹ், றஸூலுக்கு அடுத்ததாக கணவனுக்கு கட்டுப்படல் மனைவி மீது கடமையாகும்.
- இரு சாராரும் உடலியற் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறையாகச் செயற்படல்
- இவை தொடர்பான அல்குர்ஆன் - அல்ஹதீஸ் ஆதாரங்கள்.

(05 புள்ளிகள்)

**(ஈ)** சமூகத்தில் பெருகிவரும் விவகாரத்தும் அதன் விளைவுகளும்

- மார்க்க அறிவின்மையும், தம்பதிகளின் திருப்தியின்மையும்
- பெண்ணின் ஆதிக்கம் அதிகரித்தலும் ஆண்கள் புறக்கணிக்கப்படல்
- கணவன் மனைவி நீண்ட காலம் பிரிந்திருத்தலும் நடத்ததை சீர்கேடுகளும்
- சீதனம் எடுத்தலும் கணவன் மனைவியை அண்டி வாழ்தலும்
- போதை வஸ்துப் பாவனை அதிகரித்தலும் மனைவி புறக்கணிக்கபடல்.
- தொடர்பு சாதனங்களின் தூண்டல்களும் பாலியல் சீர்கேடுகளும்

(05 புள்ளிகள்)

**(02) இமாம் புகாரி(ரஹ்) அவர்களின் வாழ்வும் பணியும்**

**பிறப்பு** :

ஹிஜ்ரி 194 இல் புகாரா எனும் ஊரில் இஸ்மாயீல் என்பவருக்கு மகனாகப் பிறந்தாலும் இளமையில் தந்தையை இழத்தலும் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் இஸ்மாயீல் பின் இப்றாஹீம் பின் அல் முகீரா என்பது முழுப்பெயர்.

**வாழ்வு** :

- குதிரைச்சவாரி, குறிபார்த்து அம்பெறிதல்களில் குறிப்பிடத்தக்கவர்.

- பத்து வயதில் இஸ்லாமியக் கல்வியில் ஆர்வம், மனை ஆர்வம், பதினாறு வயதில் இப்னுல் முபாரக் வாகிஇ ஆகிய ஹதீஸ் வல்லுனர்களின் தொகுப்புக்களை மனனம் செய்தல், அத்துடன் அஸ்மாஉர்ரிஜால் தொடர்பான றாவிகளின் வாழ்ககை வரலாற்றினைத் தெரிந்திருத்தல் அடிப்படையில் பேணுதலான வாழ்க்கை.
- மேன்மையான தன்மையும், நற்பண்பும் கொண்டிருத்தல்
- ஹதீஸ் கற்பதற்காக ஆறு வருடங்கள் ஹிஜாஸில் கழித்தலும் எட்டு முறை பக்தாதுக:கு விஜயம் செய்தலும்.
- இஸ்னாத், மதன் தொடர்பாக ஒவ்வொரு ஹதீஸிலும் தெளிவுள்ளவராகக் காணப்பட்டார்.
- ஹதீஸ்வல்லுனர்களான இஸ்ஹாக்பின் ராஹுவைஹ், அலீ இப்னு மதீனி, கைத்தபா இப்னு ஸயீத், இமாம் அஹ்மத் பின் ஹன் ஆகியோர் உட்பட 1080 ஆசிரியர்களிடம் கல்வி கற்றலும் அதன்படி ஒழுகுதலும்.

**ஹதீஸ் துறையில் பங்களிப்பு**

- அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தாவின் முதல்தர ஹதீஸ் தொகுப்பான அஸ்ஸஹீஹுல் புகாரி ஆசிரியர். ஒரு இலட்சம் ஹதீஸ்களிலிருந்து வடித்தெடுத்து 7275 ஸஹீஹான ஹதீஸ்களை வழங்கியமை இதற்காகப் பதினாறு வருடங்களைத் தியாகம் செய்தமை, மஸ்ஜிதுன் நபவியில் வைத்து அப்பணியில் வுளூவுடன் புனிதமாக ஈடுபட்டமையும் அல்குர்ஆனுக்கு அடுத்த நம்பகமான நூல் ஸஹீஹ் புகாரி.
- ஸஹீஹ் புகாரி தவிர்ந்த, றப்பல்யாதை, தாரீக் அல்கபீர் போன்றோர் மேலும் இருபத்தொரு பிரபல்யமான தொகுப்புக்களையும் எழுதியுள்ளமை.
- ஹதீஸ் தொகுப்புத்துறை இன்று வரை வளர்வதற்கான ஒரு வழிகாட்டி.
- ஹதீஸ்களை தரப்படுவதற்கு இமாம் அவர்கள் இட்ட நிபந்தனைகள் ஸஹீஹான ஹதீஸ்களை இனங்காணவும் பின்னால் வந்த முஹத்திஸீன்கள் அதன்படி ஒழுகவும் முன்மாதிரியாக அமைந்தமை.
- ஹதீஸுக்கரசா் எனும் சிறப்புப் பெயர் பெறல்.
- ஹிஜ்ரி 256ல் பெருநாள் இரவு சனிக்கிழமை இறையடி சேர்தல்.

(20 புள்ளிகள்)

**03) (அ) இஸ்திஹாத் பற்றிய வரைவிலக்கணம்**

ஒரு மார்க்கப் பிரச்சினைக்கான தெளிவான சட்டம் காணப்படாத போது அது பற்றிய தீர்வைப் பெறுவதற்காக ஒரு சட்ட அறிஞர் ஷரீஅத் சட்ட மூலாதாரங்களையும், சட்ட முறைமைகளையும் பின்பற்றி தனது முழு முயற்சிகளையும் பயன்படுத்துவதாகும்.

(03 புள்ளிகள்)

**(ஆ) மஜ்தஹிதுகளுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்**

- இஜ்திஹாத் ஒரு மார்க்க விடயம் என்பதால் இது ஒரு இபாதத் ஆகும். இதனால் இது ஒரு தூய்மையான பணி இதன் தகைமைகள்
- முஸ்லிமாகவும், பருவ வயதினராகவும் இருத்தல்.
- இஜ்திஹாத் செய்யும் விடயம் தொடர்பான குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை அறிந்திருத்தல்.
- குர்ஆன், ஹதீஸோடு தொடர்பான கலைகள் பற்றியும் நன்கு அறிந்திருத்தல்.
- முன்னர் இடம்பெற்ற இஜ்மா முடிவுகளை அறிந்திருத்தல்
- சட்டவாக்க முறைகள், ஆதாரம் பெறும் வழிமுறைகள் ஆகியவற்ற அறிந்திருத்தல்
- அரபு மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்
- இஜ்திஹாத் செய்யும் காலம் அக்கால மக்களின் வாழ்க்கைப் போக்கு முதலானவற்றை அறிந்திருத்தல்.
- பயபக்தி பேணுதல், நீதிநேர்மை உடையவராக இருத்தல்
- அஜ்திஹாத் செய்யப்படும் விடயம் தொடர்பான முழுமையான அறிவித்தல்

**(இ) சட்டத்துறையில் இஜ்திஹாதின் பங்கு**

- குர்ஆன், ஹதீஸ் மட்டுமன்றி இஜ்திஹாத் மூலமாகவும் சட்டஹ்கள் பெறப்படுகின்றன.
    - அதிகமான சட்டங்கள் இஜ்திஹாத் மூலமே பெறப்பட்டுள்ளமை
    - இது ஒரு பர்ளு கிபாயாவான வணக்கம்
    - இவை தொடர்பான அல்குர்ஆன்ஈ அல்ஹதீஸ் ஆதாரங்கள்

- நபி (ஸல்) காலம் முதல் ஸஹாபாக்கள் இஜிஹாதில் ஈடுபட்டுள்ளனர்.
  - நபி(ஸல்) கால இஜ்திஹாம்துக்கான வழி காட்டல்
  - குலபாஉர் ராஸிதூன் கால இஜ்திஹாத்

- மத்ஹபுகளின் தோற்றம்
  - மத்ஹபுகள் தோன்றாத ஹிஜ்ரி 2ம் நூற்றாண்டு வரை முஜ்மஹித்களின் சட்டவாக்கப் பங்களிப்பு
  - மத்தஹிப்களின் தோற்றம் பற்றிய பின்னணி
  - மஜ்தஹித்கள் பின்பு பல பிரிவினராக நோக்கப்படல்
  - பொதுமக்கள் முத்தபிஉ, முகல்லித் என இரு பிரிவுகளாகல்.

- இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியில் ஏற்பட்ட நோக்கஹி – 8 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியுராமல் தேக்க முற்றமையும் அதற்கான காரணிகளும் ஹிஜ்ரி 13ம் நூற்றாண்டின் பின் இக்கலை மீண்டும் எழுச்சி பெற்றமையும் அதற்கான காரணங்களும் இஜ்திஹாதுடைய வாயல் மூடப்படவில்லை.

- இன்றை நவீனகாலப் பிரச்சினைகளும் இஜ்திஹாதின் தேவையும்
  தனிப்பட்ட முறையிலான இஜ்திஹாத்
  கூட்டு அடிப்படையிலான இஜ்திஹாத்

**(04) (அ) நபி(ஸல்) அவர்களது காலம்**

- நபி (ஸல்) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் ஒரு பூரண தொகுப்பாக இருக்கவில்லையெனினும் தொகுப்பதற்கு வசதியான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
- அல்குர்ஆன் சிறிது சிறதாக அருளப்பட்டதனால் நபி(ஸல்) அவர்களும் ஏனைய ஸஹாபாக்களும் அவற்றை உடனுக்குடன் மனனம் செய்தனர்.
- இரவு பகலாக தொழுகையில் தினமும் ஓதி வந்தமை.
- ஒவ்வொரு ரமழானில் ஸைத் பின் தாபத் (ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களும் ஓதிக்காட்டியமை.
- கடைசி றமழானில் ஸைத் பின் தாபித் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்து அல்குர்ஆனை சரி பார்த்தமை.
- அல்குர்ஆன் இறங்கியவுடன் ஸஹாபாக்கள் தமக்குக் கிடைத்த வசனங்களை எழுதி வந்தமை
- குத்தாபுல் வஹி : - வஹியினை எழுதுவதற்காக ஒரு குழு செயற்பட்டமை. அதில் உஸ்மான் (ரழி) முஆவியா(ரழி), ஸைத்பின் தாபித் ரழி, உபை இவ்னு கஅல்குர் போன்றோர் இடம் பெறல்.

(06 புள்ளிகள்)

**(ஆ) அபூபக்கர் (ரலி) கிலாபத் காலம்**

- அபூபக்கர் (ரழ) காலத்தில் தான் அல்குர்ஆன் நூல்வடிவில் தொகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.
- யமாமா யுத்தத்தில் அதிகமான ஹாபிழ்கள் மரணித்தமை
- உமர் (ரழி) அவர்கள் அல்குர்ஆனைத் தொகுப்பதன் அவசியம் பற்றிஆலோசனை கூறியமை
- அல்குர்ஆனும் மனனம் செய்த ஸைத் பின் தாபித் (ரழ) தலைமையில் ஏனைய ஹாபிழ்களழனட துணையோடு குர்ஆனின் அஸல் பிரதி பெறப்பட்டமை
- எழுதப்பட்ட ஏடுகளையும், ஹாபிழ்களையும் நன்கு பரிசீலித்தமை எழுதப்பட்டவைகளையும், மனனம் செய்யப்பட்டவைகளையும் ஒப்பிட்டு சரி பார்த்த பின்பே பெறப்படல்.
- பிரதி ஒன்று தொகுக்கப்பட்டமை
- தர்த்தீப் நுஸூல் முறையை விட தர்தீப் திலாவித் முறையே பேணப்பட்டது.
- தொகுக்கப்பட்ட பிரதி, முறையே அபூபக்கர் (ரழ), உமர்(ரழி) ஹப்ஸா நாயக் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(07 புள்ளிகள்)

**(இ) உஸ்மான் (ரழி) கிலாபத் காலம்**

- உஸ்மான் (ரழி) காலத்தில் தான் தொகுக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதிகளாக எழுதப்பட்டமை.
- அரபு மொழியில்லாத கிப்தி, பாரிஸி, ஸுரியாணி போன்ற பாஷைகளைப் பேசும் நாடுகளுக்கும் இஸ்லாம் பரவியதால் அல்குர்ஆனைப் பிழையாக ஓதும் நிலை ஏற்பட்டது.
- ஆர்மேனிய போராட்டங்களின் போது ஈராக் பிரதேச மக்களின் திலாவத்தினை அவதானித்த அபூ ஹுதைபா அல்யமானி (ரழி) அவர்களின் ஆலோசனையின் படி பிரதிநிதி உருவாக்கப்பட்டமை.
- ஹப்ஸா நாயகியிடம் இருந்த பிரதியைக் கொண்டு ஸைத் பின் தாபத் (ரழி) தலைமையில் நால்வர் கொண்ட குழு அமர்த்தப்படல்.
- எழுதப்பட்ட ஏழு பிரஃகு அனுப்ப்பட்டமை
- அல்குர்ஆனைத் தூய்மையாக ஓதக்கூடிய காரிகள் பலர் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டமை.
- தவறுகளைத் தவிர்ப்பதற்காக பழைய பிரதிகள் எரிக்கப்பட்டமை
- ஜாமிடல் குர்ஆன் எனும் சிறப்புப் பெயர் உஸ்மான் (ரழி) அவர்களுக்கு உரித்தாகுதல்.

(06 புள்ளிகள்)

**05 (அ) அகீதா**

- அகீதா பற்றிய விளக்கம் - கொள்கை கோட்பாடு, என்பன பொருள்
- இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைக் கோட்பாட்டைக் குறிக்கும் இஸ்லாம் வழக்கில் முடிவானதும் உறுதியானதும் வலுவானதுமான ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்களோடு தொடர்புடைய உண்மைகளைக் குறிக்கும்.
  - ❖ அகீதாவின் உள்ளடக்கம்

- அல் -இலாஹிய்யாத்
- அந்நுபுவ்வாத்
- அர்ரூஹானிய்யாத்
- அஸ்ஸம் இய்யத்

**முரண்பாடான அகீதா பரிவுகள்**

1. கவாரிஜ்
2. ஷூஆ
3. மு.ஃ.தலிலா
4. ஜஹ்மிய்யா
5. குதரிய்யா
6. முர்ஜியா
7. ஜபரிய்யா

முரண்படாத அகீதாப் பிரிவினர்

I – அவற்றுஸ்ஸுன்னா வல் ஜமாஆ

II - அஷ்அரிய்யா

III - மாதுரூதிய்யா

❖ அகீதாவைப் பாதிக்கும் அம்சங்கள் - குபர், ஷிர்க், றித்தத், நிபாக், இல்ஹா, இல்முல், அகீதாவின் தோற்றம்.

(05 புள்ளிகள்)

முக்கி சூறாக்கள்

- ஹிஜ்ரத்திற்கு முன் அருளப்பட்டமை
- சிறிய ஸுராக்கள்
- சிறிய வசனங்கள்
- மொழி நடையில் ஓசை நயம் கூடியவை
- அகீதாவைப் பற்றி அதிகமாகக் கூறுபவை
- மனிதர்களே! ஏன விளக்கும் வசனங்கள் அதிகம் கொண்டவை
- ஹுருபுல் முகத்தஆத் அதிகம் கொண்டவை

The National e-learning Portal for The General Education

- தகுந்த அ சத்தியம் செய்யப்பட்ட வசனங்களை அதிகம் கொண்டவை.
- ஹுருபுல் முகத்த ஆத் அதிகம் கொண்டவை
- தகுந்த அல்குர்ஆன் ஆதாரங்கள்
- சத்தியம் செய்யப்பட்ட வசனங்களை அதிகம் கொண்டவை.
- ஹுருபுல் முகத்த ஆத் அதிகம் கொண்டவை
- தகுந்த அல்குர்ஆன் ஆதாரங்கள்

**(இ) மதனீ சூறாக்கள்**

- ஹிஜ்ரத்திற்குப் பின் அருளப்பட்டது
- பெரிய சூறாக்கள்
- பெரிய வசனங்கள்
- மொழி நடையில் ஓசை நயம் குறைந்தவை
- சட்டங்கள், கடமைகள், சமூக அமைப்பு பற்றி அதிகம் கூறுபவை
- விசுவாசிகளே என விளக்கும் வசனங்கள் அதிகம் கொண்டவை
- தகுந்த ஆதாரங்கள் (அல்குர்ஆன்)

(05 புள்ளிகள்)

**(ஈ) ஷிர்க்**

- தௌஹீதுக்கு எதிரானது
- ஷிர்க் பற்றிய கருத்துக்கான வரைவிலக்கணம்
- பெரும் பாவத்தைச் சார்ந்தது.
- ஷிர்க்கின் வகைகளும் அவை பற்றிய விளக்கமும்

1- ஷிர்க்குல் அக்பர்
2- ஷிர்க்குல் அஸ்கர்

- ஹிர்க்குல் அக்பர் மேலும் இரு வகைப்படும்

1- ஷிர்க் அல் ஜலி – படைப்புக்களை வணங்குதல்
2ஷிர்க் அல் கபி படைப்புக்களிடம் உதவி தேடலும், அதிகாரம் வழங்கலும்

இவைகள் பற்றிய விளக்கமும் உதாரணங்களும்
ஷிர்க்கின் விளைவுகள் விளக்கப்படல்
அல்குர்ஆன் - ஹதீஸ ஆதாரங்கள் (4:116) (5:72

(05 புள்ளிகள்)